# கணவன் - மனைவியிடையே ஏற்படும் பிணக்குகளுக்கான அல்குர்ஆனின் தீர்வுகள்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் கண்ணோட்டம்

# The Quranic Solutions to the Disputes between Husband and Wife: A Juristic Perspective

M.B. Fowzul,
Department of Islamic Studies, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka
fowzulb@esn.ac.lk

**Abstract**

*The Qur'an, which highlights love and mercy between husband and wife as one of the divine signs, guides husband and wife for reconciliation also if conflicts occur between them as human beings. However, since these guidelines are not fully adhered by the Muslim community in Sri Lanka, divorce ratio is increasing. Therefore, this study aims to review the Qur'anic approaches in providing solutions to disputes between husbands and wives. This review, based on secondary data, analyzes the teachings of the Prophet (PBUH) and the opinions of the Islamic jurists regarding the family disputes. Finally, this study clarifies the guidelines for resolving disputes within the family by implementing the approaches of the Qur'an step by step to resolve disputes between husband and wife. This study anticipates that when the Quranic approaches to dispute resolution are implemented in the community, the number of divorces can be reduced.*

**Keywords**: *Dispute, Husband, Quran, Solution, Wife*

## ஆய்வு அறிமுகம்

ஒரு சமூகத்தின் ஆணி வேராக விளங்குவது குடும்பமாகும். ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சியும் ஸ்தீரத்தன்மையும் சமூகத்தின் எழுச்சிக்குத் துணை புரிவது போலவே, குடும்பத்தில் ஏற்படும் பிளவும், விவாகரத்தும் சமூகத்தைப் பாதிக்கின்றன. எனவே, இஸ்லாம் குடும்பக் கட்டமைப்பைப் பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்துகிறது. கணவன் - மனைவியிடையே ஏற்படும் சாதாரண பிணக்குகள் விவாகரத்து வரை சென்று விடக்கூடாது என்பதற்காக, அப்பிணக்குகளை கணவனும் மனைவியும் தங்களுக்கிடையே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான அணுகுமுறைகளை அல்குர்ஆன் அழகாக முன் வைக்கிறது. அந்த அல்குர்ஆனின் அணுகுமுறைகள் என்ன? அவை எத்தகைய தீர்வுகளை முன்வைக்கின்றன என்பதை மீளாய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கணவன் மனைவிடையே ஏற்படும் பிணக்குகளின் விளைவாக முஸ்லிம்கள் மத்தியில் விவாகரத்துகள் அதிகரித்துள்ளன. இவ்வாறு விவாகரத்துகள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் காழி நீதிபதிகள் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தாமை தான் என்பதை 2014ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வொன்று (ஜஸீல் எம்.ஐ.எம்., பௌசுல் எம்.பீ., 2021) உறுதிப்படுத்துகின்றது. காழிநீதிமன்றத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட சுமார் 300 நபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட கண்டறிதல்களின் படி,

பெரும்பாலான காழிகள் சமரச முயற்சிக்கு கூடிய கரிசனை காட்டவில்லை என்பதை அவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

மேலும், இவ்வாய்வாளனின் அவதானம், இத்துறையில் மேற்கொண்ட கள ஆய்வின் அனுபவம் என்பன இஸ்லாமிய ஷரீஆவின் வழிகாட்டலை முழுமையாகப் பின்பற்றாமையே விவாகரத்துகள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் எனக் கருதுகின்றன. குறிப்பாக கணவன் - மனைவியிடையே பிணக்குகள் ஏற்படும் போது அவற்றைத் தீர்ப்பதற்கான அல்குர்ஆனின் அணுகுமுறைகள் இலங்கைச் சூழலில் பின்பற்றப்படுவது மிக அரிதாகவே காணப்படுகின்றது. கணவன் - மனைவியிடையே பிணக்குகள் ஏற்பட்டவுடன் அதைப் பகிரங்கப்படுத்தி, காழி நீதிமன்றத்தை நாடிச் செல்லும் நடைமுறையே அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே, இவ்வாய்வு கணவன் - மனைவிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான அல்குர்ஆனின் தீர்வுகளை மக்கள் மயப்படுத்துவதன் மூலம் குறித்த தம்பதியினர் தமது பிணக்குகளை இலகுவாக தமக்குள்ளேயே தீர்த்துக் கொள்வதற்கு அல்லது குடும்ப மத்தியஸ்தர்களை நியமித்து குடும்பத்துக்குள்ளேயே பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கான தெளிவான வழிகாட்டல்களை முன்வைக்கின்றது.

மேலும் அல்குர்ஆனின் தீர்வுகளைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக அல்குர்ஆன் வசனங்கள், நபி (ஸல்) அவர்களின் போதனைகள், இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்களின் கருத்துக்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கிறது. இறுதியாக அல்குர்ஆனின் தீர்வுகளை முழுமையாகப் பின்பற்றும் போது குடும்பப் பிணக்குகளை குடும்பத்துக்குள்ளேயே தீர்த்து வைக்கலாம் என்பதே இவ்வாய்வின் கண்டறிதலாகும்.

**ஆய்வு முறையியல்**

இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வு, குடும்பப் பிணக்குகளுக்கான தீர்வுகள் பற்றிய அல்குர்ஆனிய வசனங்களைப் பகுப்பாய்வு செய்வதோடு, இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களின் போதனைகளையும், இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்களின் கருத்துக்களையும், இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வுகளையும் மீளாய்வுக்குற்படுத்தியுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

1. ஹில்மா எல்.எப்., ஜஸீல் எம்.ஐ.எம். (2021) - 'முஸ்லிம் குடும்பங்களில் வீட்டு வன்முறைகள்: கொழும்பு பிரதேச நேர்வு நிலை பற்றிய கள ஆய்வு'.

இவ்வாய்வு கொழும்பு மாவட்ட முஸ்லிம் குடும்பங்களின் மத்தியில் இடம்பெறும் வீட்டு வன்முறைகளையும் அதற்கான காரணங்களையும் பரிசீலிக்கிறது. அக்குடும்பங்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு போதைப்பாவனை, தவறான தொடர்புகள், வறுமை, பொருளாதார நெருக்கடி போன்றன பிரதான காரணங்கள் என்று அவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது. ஆயினும்,

இவ்வாய்வு அவ்வன்முறைகளைக் குறைப்பதற்கான அல்லது ஒழிப்பதற்கான எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை.

2. அமீர் றுஸானா, அஹமட் சர்ஜூன் ராஸிக். (2019) - 'விவாகரத்து முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்: அனுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு'.

இவ்வாய்வு முஸ்லிம் பெண்கள் மத்தியில் விவாகரத்துக்கான காரணம், கணவன் மனைவியிடையே எழும் சந்தேகங்கள் மற்றும் பராமரிப்பின்மை என்று தெரிவிக்கின்றது. அத்தோடு, விவாகரத்தின் விளைவாக தனிநபர் நடத்தையில் மாற்றம், சுயகௌரவம் இழக்கப்படல், பாதுகாப்பு இழக்கப்படல், கலாசார, சமூக சீர்கேடுகள், குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகுதல் போன்ற தாக்கங்கள் ஏற்படுவதாக இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது. இவ்வாய்வு விவாகரத்திற்கான காரணிகளையும், அதன் தாக்கங்களையும் மதிப்பீடு செய்கிறது. ஆனால், அவற்றைக் குறைப்பதற்கான தீர்வுகள் பற்றி எதுவும் கூறவில்லை.

3. ஜஸீல் எம்,ஜ,எம்., பௌசுல் எம்.பீ. (2021) - முஸ்லிம் குடும்பப் பிணக்குகளில் காழி நீதிமன்ற செயற்பாடுகள்: இலங்கை காழி நீதிமன்றங்கள் நேர்வு நிலை பற்றிய பகுப்பாய்வு.

இவ்வாய்வு இலங்கை காழி நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் குடும்ப வழக்குகள், அவற்றைக் காழிகள் கையாளும் முறைமை போன்றவை பற்றிப் பகுப்பாய்வு செய்கின்றது. இவ்வாய்வும் குடும்பப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றிப் பேசுவதை நோக்கக் கொண்டிருக்கவில்லை.

மேலுள்ள ஆய்வுகளை மீளாய்வு செய்யும் போது, அவை அனைத்தும் குடும்பப் பிணக்குகளை அடையாளம் காண்பதிலும், அதன் தாக்கங்களை மதிப்பீடு செய்வதிலுமே கவனம் செலுத்துகின்றன. மாறாக, எந்த ஆய்வும் குடும்பப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான வழிறைகள் பற்றி ஆய்வு செய்யவில்லை. எனவே அந்த ஆய்வு இடைவெளியை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவ்வாய்வு குடும்பப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான இஸ்லாமிய வழிமுறைகள் பற்றி ஆய்வு செய்கிறது.

**பிணக்குகள் பற்றிய வரைவிலக்கணம்**

அல்குர்ஆனில் கணவன் - மனைவிக்கிடையிலான பிணக்கைக் குறிக்க 'நுஷூஸ்' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. 'நுஷூஸ்' என்றால் கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் வெறுப்பதாகும். அதாவது கணவனோடு முரண்பட்டு அவனை வெறுப்பதாகும். கணவனை கோபத்திற்குள்ளாக்கி, அவனது கட்டுப்பாட்டிலிருந்து நீங்குவதாகும் (இப்னு மன்லூர், 1956).

நுஷூஸ் என்பது 'மனைவி தனது கணவனுக்குக் கட்டுப்படுவதிலிருந்து நீங்குவதாகும் என மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த இமாம்கள் வரைவிலக்கணப்படுத்துகின்றனர். ஆயினும் 'மனைவி தனது கணவனின் வீட்டிலிருந்து (அவனது அனுமதியின்றி எவ்வித

நியாயமுமின்றி) வெளியேறுவது (கூட) நுஷூஸ்தான் என்று ஹனபி மத்ஹபினர் வாதிடுகின்றனர் (இப்னு குதாமா, 1992).

ஆனால், அல்குர்ஆனிய வசனங்களை நோக்கும் போது நுஷூஸ் என்பது கணவன், மனைவி ஆகிய இருவரிடமிருந்தும் ஏற்படும் என்று புலனாகின்றது. இதனையே அல்ஷர்காவி (1950, பா.02, பக்.280) கணவனிடமிருந்து நுஷூஸ் ஏற்படுவது பிரபல்யம் இல்லாத போதிலும் அது கணவன் மனைவி இருவரிடமிருந்தும் தோன்றுவதாகும் என்று குறிப்பிடுகின்றார்.

**கணவனிடமிருந்து ஏற்படும் பிணக்குகள்**

குடும்ப வாழ்வில் மனைவி தன் கணவனுடன் பிணக்கை ஏற்படுத்துவது போல, கணவனும் தன் மனைவியுடன் பிணக்கை ஏற்படுத்தும் சூழ்நிலை ஏற்படுகிறது. கணவனுடைய பிணக்குகள் பின்வரும் அவனது செயற்பாடுகளால் வெளிப்படுத்தப்படுகின்றன என்று இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

1. மனைவியுடனான உடலுறவைத் தவிர்த்தல்.
2. அவளது பேச்சுகளைப் புறக்கணித்தல்.
3. அவளோடு உறவாடுவதைக் குறைத்தல்.
4. அவளுக்கான செலவைக் குறைத்தல் அல்லது வழங்காதிருத்தல்.

மேலும், அவனது பிணக்கிற்கான பின்னணிக் காரணிகள் பின்வருமாறு அமைகின்றன என்று பத்ர் அப்துல் ஹமீது பட்டியலிடுகிறார்.

1. மனைவி தன் கணவனுடன் சிறந்த மகிழ்ச்சியான உறவைப் பேணாமை.
2. கணவன் - மனைவியிடையே பரஸ்பர புரிந்துணர்வு, நெருக்கம் துண்டிக்கப்படல்.
3. மனைவி முதுமையடைந்து கணவனுக்குரிய கடமைகளை நிறைவேற்ற முடியாதிருத்தல்.
4. கணவன் - மனைவியிடையே ஏற்படும் தேவையற்ற வாக்குவாதம்.
5. மனைவி குழந்தைப்பேற்றுப் பாக்கியம் அற்றவளாகயிருத்தல்.
6. கணவனின் இயல்பைப் புரிந்து செயற்படாமை.

இவ்வாறு ஏதோவொரு காரணத்தினால் கணவன் தன்னுடன் பிணக்கை ஏற்படுத்துகிறான் என்பதை மனைவி உணர்ந்தால், அவள் தனது உறவினர்களிடம் கூறி, குடும்ப மத்தியஸ்தர்களை நியமித்து, சமாதானத்தை ஏற்படுத்தவே முயற்சிக்க வேண்டும். அதுவே நல்லிணக்கமும் சிறந்த தீர்வும் என்று அல்குர்ஆன் பின்வருமாறு வலியுறுத்துகிறது.

"ஒரு பெண் தன் கணவனிடமிருந்து வெறுப்பையோ அல்லது புறக்கணிப்பையோ பயந்தால், அவர்களிருவரும் தங்களிருவருக்கிடையே ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதில் அவ்விருவர் மீதும் குற்றமில்லை. சமாதானமே மிக மேலானது (அந்நிஸா : 128).

ஆயினும், கணவன் சமாதானத்தை விரும்பவில்லையாயின் அவ்விடயத்தை காழியிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். காழி குறித்த கணவனை அழைத்து உபதேசம் செய்வார்.

முடியாத போது எச்சரிக்கை செய்வார். இறுதியாக அக்கணவனை அடித்துத் திருத்துவதற்கும் காழிக்கு அனுமதியுண்டு (அல்-காஸானீ, 2003).

**மனைவியிடம் இருந்து ஏற்படும் பிணக்குகள்**

கணவனுடனான மனைவியின் பிணக்குகள் பின்வரும் வடிவங்களில் ஏற்படுகின்றன.

1. ஒரு பெண் தனது கணவனுடனான உடலுறவைத் தவிர்ந்து கொள்ளுதல்.
   ''ஒரு மனிதன் தனது மனைவியை உடலுறவுக்கு அழைக்கும் போது அவள் மறுத்தால். அவளது கணவன் அவளைப் பொருந்திக் கொள்ளும் வரை வானத்தில் உள்ளவனின் (அல்லாஹ்வின்) கோபத்திற்குள்ளாகிறாள்'' (முஸ்லிம், ஹதீஸ்:2595).

   ஒரு மனைவி மாதவிடாய், பிரசவ ருது போன்ற மார்க்கம் அனுமதித்த காரணங்கள் ஏதுமின்றி கணவனுடன் உடலுறவு கொள்வதைத் தவிர்த்துத் கொள்ளுதல் (ஹராம்) தடுக்கப்பட்டதாகும்.

2. கணவனுடன் முரண்படல் அல்லது அவனது கட்டளையைப் புறக்கணித்தல்:
   கணவனின் அனுமதியின்றி வீட்டை விட்டு வெளியேறுதல், கணவன் வெறுப்பவர்களை வீட்டுக்குள் அனுமதித்தல், கணவன் தடுத்த நபர்களைச் சந்தித்தல், கணவன் தடை செய்த இடங்களுக்குச் செல்லுதல் போன்றன இவ்வகையைச் சார்ந்ததாகும்.

3. கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாதிருத்தல் அல்லது கணவனுடன் சேர்ந்து பிரயாணம் செய்ய மறுத்தல்.

4. கணவனுடன் மிக மோசமாக நடந்து கொள்ளல். சொல்லால், செயலால் கணவனைத் துன்புறுத்தல்.

இவ்வாறு மனைவியின் புறத்திலிருந்து பிணக்குகள் ஏற்பட்டால், அப்பிணக்குகளைக் களைந்து, விவாகரத்திலிருந்து அக்குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக அல்குர்ஆன் படிமுறை ரீதியான தீர்வுகளை முன்வைக்கின்றது. இலகுவான செயன்முறையிலிருந்து கடுமையான செயன்முறை வரை கட்டங்கட்டமாக கணவன் தனது மனைவியை நெறிப்படுத்தி, சமரசப்படுத்தி, தங்களுக்குள் பிளவு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்.

**நுஷூஸ் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு**

இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்கள் மத்தியில் நுஷூஸ் என்பதை வரைவிலக்கணப்படுத்துவதில் கருத்து முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும், மனைவி தன் கணவனுடன் நுஷூஸை (பிணக்கை) ஏற்படுத்துவது ஹராம் என்ற கருத்தில் ஒன்றுபடுகின்றனர். ஆயினும் அவர்களில் சிலர் அதைப் பெரும் பாவங்களில் ஒன்றாகவும் கருதுகின்றனர் (இப்னு ஹஜர் 2003, பா.02, பக்.47). ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஒரு பெண்மணியை நோக்கி, நீ கணவனையுடைவளா?

என்று வினவிய போது, அப்பெண் ஆம் என்றாள். அதற்கு நபியவர்கள்: 'நீ உனது கணவனுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றாய் என்பதைப் பார்த்துக் கொள். ஏனெனில், உனது சுவர்க்கமும் உனது நரகமும் அவர்தான் என்று நபியவர்கள் கூறினார்கள் (அஹ்மத், பா.06 பக்.419).

மேலும் ''கணவன் தனது மனைவியை உடலுறவு கொள்ள அழைக்கும் போது அவள் அதற்கு மறுத்தால், விடியும் வரை அவளை மலக்குகள் சபிப்பார்கள்'' (புஹாரி பா.09, பக்.294) என்ற ஹதீஸும் கணவனின் கட்டளையைப் புறக்கணிப்பது பாவம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**மனைவியின் பிணக்கைத் தீர்ப்பதற்கான அல்குர்ஆனின் தீர்வுகள்**

ஒரு கணவன் தனது மனைவியுடன் மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும். அவன் தனது மனைவியிடம் சிறிய தவறுகளைக் காணும் போது, அவற்றைப் பொருட்படுத்தாது, அவளையும் அவளது இயல்புகளையும் பொருந்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துணர்வுடன் அவளது தவறுகளைப் பொருந்திக் கொள்ளும் போது, குடும்ப வாழ்வு சிறப்பாக அமைதல் போன்ற எண்ணிலடங்காத நன்மைகள் பலவற்றை அவன் பெற்றுக் கொள்வான் என்று அல்குர்ஆன் சிறப்பித்துக் கூறுகின்றது. ''மேலும், அவர்களுடன் அழகான முறையில் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்துவிடுவீர்களானால், நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும். (அவ்வாறு வெறுக்கக்கூடிய) அதில் அல்லாஹ் அநேக நன்மைகளை ஏற்படுத்தலாம் (அந்நிஸா: 19).

மேலும், ''ஒரு மு.ஃமினான ஆண் (கணவன்) மு.ஃமினான பெண்ணை (மனைவியை) கோபிக்க வேண்டாம். அவளது நடத்தைகளில் ஒன்று அவனை கோபத்திற்குள்ளாக்கினால், ஏனைய அவளது நன்னடத்தைகளை அவன் பொருந்திக் கொள்ளட்டும்'' (முஸ்லிம்) என்றும் நபி (ஸல்) அறிவுரை பகர்ந்தார்கள்.

கணவன் தனது விட்டுக்கொடுப்பின் பின்னரும் தனது மனைவியிடம் தவறுகளை அல்லது முரண்பாட்டைக் கண்டால், அவளை நெறிப்படுத்த வேண்டும். நெறிப்படுத்தலுக்கான படிமுறைத் தீர்வுகளாக உபதேசம் செய்தல், படுக்கையை விட்டும் தூரமாக்குதல், (காயம் ஏற்படாதவாறு) அடித்தல், இரு தரப்பிலிருந்தும் (நடுநிலையான) இரு நடுவர்களை நியமித்தல் போன்ற அழகிய தீர்வுகளை இஸ்லாம் முன்வைக்கிறது.

**1. உபதேசம் செய்தல்**

உபதேசம் என்பதற்கு அறபு மொழியில் ''மவ்யிழா'' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பொருள் உபதேசம் செய்தல், தண்டனைகளை நினைவுபடுத்துதல், அதாவது ஒரு மனிதனின் உள்ளம் வெகுமதி அல்லது தண்டனை ஆகிய எதனைக் கொண்டு கட்டுப்படுமோ அதனை நினைவூட்டுதல் என்பதாகும் (இப்னு மன்ழூர், 1956, பா.15, பக்.345).

அல்குர்ஆனில் 'மவ்யிழா' என்ற பதம் பல வடிவங்களில் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

சூறா அந்நிஸா 63 வது வசனத்தில் வருகின்ற இப்பதம் அவர்களை எச்சரிக்கை செய்யுங்கள், அச்சுறுத்துங்கள் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே, ஸூரா அந்நூர் 17 வது வசனத்தில் உள்ள இப்பதம் தடுத்தல், எச்சரித்தல் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், ஸூரா யூனுஸ் 57 வது வசனத்தில் இப்பதம் உபதேசம், வழிகாட்டி என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அல்குர்ஆன் வசனங்களை நோக்கும் போது 'மவ்யிழா' என்ற பதம் நன்மைகளை, வெகுமதிகளைக் கொண்டு ஆர்வமூட்டுவதையும், தீமைகளையும் தண்டனைகளையும் கொண்டு அச்சுறுத்துவதையும் குறித்துக் காட்டுவதை அவதானிக்கலாம்.

இந்த வகையில் ஒரு கணவன் தன்னோடு முரண்படுகின்ற மனைவிக்கு உபதேசம் செய்யும் போது மென்மையாக, இரக்கமாக, அன்பாக, நிதானதாக கணவனுக்குக் கட்டுப்படுவது பற்றிய இறைகட்டளைகளை நினைவூட்ட வேண்டும். அத்தோடு கணவனுக்கு மாறு செய்வதால் இவ்வுலகிலும் மறுமையிலும் ஏற்படும் தீமைகளைக் கூறி எச்சரிக்கை செய்ய வேண்டும். உபதேசம் செய்தல் பற்றிய அல்குர்ஆன் வசனத்தை ஸய்யித் குத்ப் (2003, பா.02, பக்.653) விளக்கும் போது 'கணவன் மனைவிக்கிடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான முதலாவது நடவடிக்கை இதுவாகும். குடும்பத் தலைவன் என்ற வகையில் கணவன் முரண்பாட்டுக்கான தீர்வை மிக நிதானமாக, ஒழுக்கமாக மேற்கொள்ள வேண்டும்' என்று விளக்குகிறார்.

உபதேசம் செய்தல் என்ற நடவடிக்கை மனைவியின் உணர்வுகளைக் காயப்படுத்துவதாகவோ, அவளைப் பழிவாங்குவதாகவோ இல்லாது, எப்படியான அறிவுரைகள் கூறினால் மனைவி ஏற்றுக் கொள்வாள் என்ற மனைவியின் இயல்பை அல்லது தன்மையை அறிந்து உபதேசம் செய்ய வேண்டும். ஆகவே தான், ஓர் உபதேசம் செய்யும் போது பின்வரும் நடத்தைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது.

1. பேச்சில் மென்மையும் இரக்கமும் இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மென்மையாக பேசுவார்கள். புன்முறுவலுடனே தனது ஸஹாபாக்களோடு உரையாடுவார்கள். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மென்மையாக நடந்து கொண்டதனால் தான் மக்கள் அவர்களைச் சூழ ஒன்று கூடினார்கள் என்று அல்குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது.

   ''நபியே அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (இரக்கமுள்ளவராக) நடந்து கொள்கிறீர். மேலும் சொல்லில் கடுகடுப்பானவராக இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால் உம்மிடம் இருந்து அவர்கள் பிரிந்து சென்றிருப்பார்கள் (ஆலு இம்ரான்: 159).

   மேலும், அல்லாஹ் மூஸா (அலை), ஹாரூன் (அலை) ஆகிய இருவரையும் பிர்அவ்னிடம் சென்று அல்லாஹ்வைப் பற்றி எடுத்துரைக்குமாறு கட்டளையிட்ட போது, ''நீங்கள் இருவரும் பிர்அவ்னிடம் செல்லுங்கள். நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்து விட்டான். ஆகவே நீங்கள் இருவரும் கனிவான சொல்லை அவனுக்குச் சொல்லுங்கள். அதனால் அவன் நல்லுபதேசம் பெறலாம் அல்லது அச்சமடையலாம் (தாஹா: 44) என்று அல்லாஹ் பிர்அவ்னிடம் சென்று கூட மென்மையாகப் பேசுமாறு கட்டளையிடுகிறான்.

2. பேசப்படுபவரின் நிலை அறிந்து பொருத்தமானதை பேசுதல்:
   அல்லாஹ் ஒவ்வொரு மனிதனையும் வெவ்வேறு பண்புகள், குணங்கள், வித்தியாசமான சிந்தனைகள், இயல்புகளைக் கொண்டே படைத்திருக்கிறான். எனவே ஒரு மனிதனுடன் பேசும் போது அவனது உளவியல், உடலியல் நிலை, சிந்திக்கின்ற தன்மை ஆகியவற்றிற்கேற்ப பேச வேண்டும். எனவே, ஒரு கணவன் தனது மனைவிக்கு உபதேசம் செய்யும் போது அவளது இயல்பு, அறிவு, உளவியல் ஆகியவற்றை கருத்திற் கொண்டே அறிவுரை கூற வேண்டும்.

3. மிகச் சிறந்த முறையைக் கையாளுதல்:
   உபதேசம் செய்யும் போது தீய வார்த்தைகளைப் பேசுவது, சபிப்பது, மனதைப் புண்படுத்தக் கூடியவாறு குத்திப் பேசுவது போன்ற தீய குணங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாகவே, ஒரு மு.ஃமின் (மற்றவர்களின்) மனம் புண்படுமாறு குத்திப் பேசுபவனாகவோ, சபிப்பவனாகவோ, தீய வார்த்தைகளைப் பேசுபவனாகவோ இருக்கமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அத்திர்மிதி, ஹதீஸ்: 1977). இதனைத் தான் அல்குர்ஆன் ‘‘என்னுடைய அடியார்களுக்கு நீர் கூறுவீராக (எந்த மனிதனுடன் பேசிய போதிலும்) எது நல்லதோ அதையே அவர்கள் கூறவும் (பனீ இஸ்ராயில்: 53) என்றும் ‘‘நீர் (மனிதர்களை) விவேகத்தை கொண்டும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உமது இரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக அன்றியும் எது மிக அழகானதோ அதைக் கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக (அந்நஹ்ல்: 125) என்றும் கட்டளையிடுகின்றது. இந்த அல்குர்ஆனின் வழிகாட்டலுக்கேற்ப ஒரு கணவன் தனது மனைவியின் இயல்பையும், தன்மைகளையும் நன்கறிந்து, விவேகமாக, மிகச் சிறந்த முறையில் உபதேசம் செய்யும் போது அவளது மனைவியை நெறிப்படுத்தி, அவனுக்கும் அவனது மனைவிக்குமிடையிலான முரண்பாட்டைக் களைந்து விடலாம்.

**படுக்கையை விட்டும் தூரமாக்குதல்**

ஒரு கணவன் உபதேசத்தின் மூலம் தனது மனைவியை நெறிப்படுத்த முடியாத போது, அடுத்த கட்ட நடவடிக்கையாக அவளை படுக்கையை விட்டும் தூரமாக்க வேண்டும். ஹஜர என்ற சொல் பல கருத்துக்களில் பயன்படுத்தப்பட்ட போதிலும் இச்சொல் ‘‘ஹஜர ஸவ்ஜஹு’’ என்று மனைவியுடன் தொடர்புபடும் போது ‘அவன் மனைவியை விட்டு ஒதுங்கினான், ஆனால் தலாக் சொல்லவில்லை’ என்ற கருத்தைக் குறிக்கும். (அல்மு.ஃஜம் அல் வஸீத் பா.2 பக்:972) இதனைத்தான் அல்குர்ஆன் ‘‘பெண்களாகிய அவர்களில் தம் கணவனுக்கு எவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களோ! அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் (அவர்கள் திருந்தாவிடில்) படுக்கைகளிலும் அவர்களை வெறுத்து (ஒதுக்கி) விடுங்கள் என்று கட்டளையிடுகின்றது. (அந்நிஸா: 34).

இஸ்லாமிய அறிஞர்கள் இவ்விடயம் பற்றி விளக்கும் போது 'வெறுத்து ஒதுக்குதல்' என்பது ஒரு மனிதன் இன்னொரு நபரைச் சந்திக்கும் போது பேசாமல் இருப்பதைக் குறிக்கும் என்று வரைவிலக்கணப்படுத்துகின்றனர் (இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி, பா.04, பக்.466).

'ஹஜர்' என்பது பேசாமல் வெறுத்திருப்பதைக் குறிக்கும் என்று அல் ஜஸ்ஸாஸ் குறிப்பிடுகிறார். ஆனால், ஸஈதிப்னு ஜுபைர் (றஹ்) 'உடல் உறவைத் தவிர்ந்து கொள்வதைக் குறிக்கும்' என்று விளக்கமளிக்கின்றார் (அல்ஜஸ்ஸாஸ், பா.02, பக்.89). அவ்வாறே, ''ஹஜர்' என்பது படுக்கையை விட்டுத் தூரமாகி, அவளைப் புறக்கணித்து, அவளோடு உடல் உறவு கொள்ளாது இருத்தல்' என்று இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் விளக்குகிறார்கள் (அல்குர்துபி, பா.05, பக்.171).

ஆயினும், பேசாமல் வெறுத்து இருப்பதை மூன்று நாட்களுக்கு மேல் அதிகரிக்கக்கூடாது. மேலும் கணவன் தனது மனைவியை படுக்கையில் இருந்து தூரமாக்கினால் அம்மனைவி உண்மையாகவே கணவனை விரும்புபவளாக இருந்தால் அது அவளுக்கு கஷ்டமாக இருக்கும். எனவே, அவள் கணவனுடனான பிணக்கை விட்டு விடுவாள். அம்மனைவி கோபமாக இருந்தால் அவ்வாறு அவன் வெறுப்பதை ஏற்றுக் கொள்வாள். இது அவள் கணவனுடன் முரண்பட்டு இருக்கிறாள் என்பதற்குச் சான்றாக அமையும் என இமாம் ஷாபிஈ (றஹ்) குறிப்பிடுகின்றார் (அர்ராஸி, பா.10, பக்.90).

இவ்வாறு கணவன் தனது மனைவியை வெறுத்திருப்பதை மீளாய்வு செய்து, மீண்டும் தனது மனைவியுடன் பேசி, உபதேசம் செய்து நெறிப்படுத்தவும் முயற்சிக்கலாம். ஆனால், அம்மனைவியை அவ்வாறு திருத்த முடியாத போது, அடுத்த கட்ட நடவடிக்கையாக அவன் தனது மனைவியை அடிப்பதற்கு அல்குர்ஆன் அனுமதியளிக்கின்றது.

**மனைவியை அடித்துத் திருத்துதல்**

அடித்தல் என்பதற்கு அல்குர்ஆன் ''ழரப'' என்ற பதத்தைப் பிரயோகிக்கின்றது. இப்பதம் அறபு மொழியில் பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும். 'ழர்ப்' என்பது ஒரு பொருளை இன்னொரு பொருள் மீது வைத்தல் என்றும் பொருள்படும். இந்தக் கருத்தை சூறா ஸாத் 44வது வசனம் ''மேலும் புல்லிலிருந்து ஒரு பிடியை உமது கையில் எடுத்து அதனைக் கொண்டு (உம்மனைவியை) அடியும் நீர் (உம்முடைய) சத்தியத்தை முறிக்கவும் வேண்டாம்'' என்று தெளிவுபடுத்துகின்றது.

ஒரு கணவன் தனது மனைவியை அடிப்பது ஆகுமானது. மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டது என்பதிலே பிக்ஹ் கலை அறிஞர்கள் மத்தியில் எவ்வித கருத்து முரண்பாடுமில்லை. ஏனெனில், அல்குர்ஆனும் சுன்னாவும் தெளிவாகவே அதை அனுமதிக்கின்றன. ''இன்னும் (அப்பெண்களாகிய) அவர்களில் (தம் கணவனுக்கு) எவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களோ அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள், (அவர்கள் திருந்தாவிடில் படுக்கையிலும் அவர்களை வெறுத்து ஒதுக்கி விடுங்கள். (அதிலும் அவர்கள் திருந்தாவிடில்) அவர்களை (காயம் ஏற்படாது) அடியுங்கள் (அந்நிஸா: 33).

இவ்வசனம் ஒரு கணவன் தனது மனைவியிடம் முரண்பாட்டைக் காணும் போது செய்ய வேண்டிய நடவடிக்கைகளில் உபதேசம் செய்தல், படுக்கையில், இருந்து வெறுத்து ஒதுக்குதல் ஆகிய இரண்டு கட்டங்களின் பின்னர் மூன்றாவது கட்டமாக காயம் ஏற்படாதவாறு அடித்து திருத்தும் படி கட்டளையிடுகின்றது. இதனையே நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின் போது அறபா பேருரையில் அவர்களை காயம் ஏற்படாதவாறு அடியுங்கள் என்று அனுமதியளித்தார்கள் (அந்நவவி, பா.08, பக்.339).

எனினும், இஸ்லாமிய பிக்ஹ் சட்டக்கலை அறிஞர்கள் ஒரு கணவன் தன் மனைவியை அடிப்பது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட போதிலும் கூட தவிர்ந்து கொள்வதே சிறந்தது என்ற கருத்தில் உடன்படுகின்றனர் (அஷ்ஷாபிஈ, பா.05, பக்.163, அல்-காஸானி, பா.02, பக்.334). ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் தனது கையினால் எந்தப் பெண்ணையோ, அடிமையையோ, எவரையுமே அடிக்கவில்லை என்று ஆயிஷா (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் ‘உங்களில் எவரும் அடிமையை சாட்டையால் அடிப்பது போல் தனது மனைவியை அடிக்க வேண்டாம்’ என்றும் கட்டளையிட்டார்கள் (புஹாரி).

அவ்வாறு அல்லாஹ்வின் அடிமைகளை (மனைவியை) அடிக்காதீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கண்டிப்பாக கட்டளையிட்ட பின்னர், உமர் (ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து, பெண்கள் தங்கள் கணவனுக்கு எதிராகத் துணிந்து விட்டார்கள் (அடம் பிடிக்கிறார்கள்) என்று கூறிய போது, நபியவர்கள் பெண்களை அடிப்பதற்கு அனுமதித்தார்கள். ஆனால், அதன் பின் அதிகமான பெண்கள் நபியவர்களிடம் சென்று தனது கணவனை (கணவனின் அடியை) முறையிட்டார்கள். எனவே நபி (ஸல்) அவர்கள் பெண்கள் தமது கணவனை முறையிட முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் வந்து சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய கணவர்கள் உங்களில் சிறந்தவர்கள் அல்ல என்று எச்சரித்தார்கள் (அபூதாவூத் பா.06, பக்.50).

மேலுள்ள ஹதீஸ்களை அவதானிக்கும் போது ஒரு கணவன் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஒன்றாக தனது மனைவியை அடிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பினும் தனது மனைவியின் நடத்தைகளில் பொறுமையைக் கடைபிடித்து அவளை அடிப்பதை விட்டும் தவிர்ந்து கொள்வதே மிகச் சிறந்தது என்பது தெளிவாகின்றது.

**ஒழுக்காற்று நடவடிக்கைகளில் படிமுறை ஒழுங்கை பின்பற்றுதல்**

ஒரு மனைவி தனது கணவனுடன் பிணக்கை ஏற்படுத்தும் போது அவளைத் திருத்துவதற்கான வழிமுறைகளாக உபதேசம் செய்தல், படுக்கையில் ஒதுக்கி வைத்தல், காயம் ஏற்படாதவாறு அடித்தல் ஆகியவற்றை அல்குர்ஆன் அனுமதிக்கிறது. ஆயினும், அவ்வழிமுறைகளை படிமுறை ஒழுங்கின் படி செய்வதா? இல்லையா? என்ற விடயத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் இரண்டு விதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

ஒழுக்காற்று நடவடிக்கைகளில் படிமுறை ஒழுங்கைப் பின்பற்றுவது கட்டாயக் கடமை (வாஜிப்). உபதேசம் பயனளிக்காவிட்டால் மாத்திரமே படுக்கையில் ஒதுக்கி வைக்கும் நிலைக்குச் செல்ல வேண்டும். அவ்வாறே, உபதேசமும் படுக்கையில் ஒதுக்கி வைத்தலும் பயனளிக்காத

சந்தர்ப்பத்தில் மாத்திரமே அடித்துத் திருத்தும் நிலைக்குச் செல்ல வேண்டும். இந்தப் படிமுறை ஒழுங்கைக் கடைபிடிக்குமாறு அல்குர்ஆன் (நிஸா : 52) வலியுறுத்துகின்றது என ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி, ழாகிரீ ஆகிய மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் அனைவரும் உறுதிப்படுத்துகின்றனர் (இப்னு குதாமா, 1992).

ஆயினும், ஒழுக்காற்று நடவடிக்கைகளில் படிமுறை ஒழுங்கைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. மனைவி பிணக்கை ஏற்படுத்தினால் அவளைத் திருத்துவதற்காக இம்மூன்று வழிமுறைகளையும் ஒரே நேரத்தில் பிரயோகிக்கலாம். அவ்வாறே சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அடித்துத் திருத்தும் வழிமுறையையே முதலாவது நடவடிக்கையாகவும் மேற்கொள்ளலாம் என ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அதிகமான அறிஞர்கள் கருதுகின்றனர் (அந்நவவி, பா.08, பக்.340).

மேற்கூறப்பட்ட இரண்டு கருத்துக்களிலும் படிமுறை ஒழுங்கைப் பேணுதல் கட்டாயக் கடமை எனும் முதலாவது கருத்தே ஒழுக்காற்று நடவடிக்கைகளில் நடைமுறைச் சாத்தியமானதாகவும், பொருத்தமானதாகும், பிணக்குகளை இலகுவாகத் தீர்ப்பதற்கான வழிகாட்டலாகவும் அமைகின்றது எனலாம்.

**மத்தியஸ்தர்களை நியமித்தல்**

மேற்கூறப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பயனளிக்காத போது கணவன் - மனைவிக்கிடையிலான பிணக்கு அதிகரித்து பிளவு ஏற்பட்டு விடலாம் என்ற நிலை உருவாகும் போது மத்தியஸ்தர்களை நியமிப்பதற்கான வழிகாட்டலை அல்குர்ஆன் வழங்குகிறது.

"இன்னும் (கணவன் - மனைவியாகிய) இருவருக்குள் (பிணக்குண்டாகி) பிளவை நீங்கள் அஞ்சினால், அப்போது அவனது குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும், அவளது குடும்பத்தாரில் ஒரு மத்தியஸ்தரையும் நீங்கள் (ஏற்படுத்தி) அனுப்புங்கள். அவ்விருவரும் (இவர்களுக்குள்) சமாதானத்தை ஏற்படுத்த நாடினால், அல்லாஹ் இவ்விருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான்" (அந்நிஸாஉ : 04).

மேலுள்ள அல்குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ள 'ஹகம்' என்ற சொல் 'தீர்ப்பு வழங்குபவன், மத்தியஸ்தராக இருப்பவன்' எனற பொருளைத் தருகின்றது. இஸ்லாமிய சட்டவியலில் இவ்வாறு மத்தியஸ்தரை நியமிப்பதற்கு 'தஹ்கீம்' என்ற சொல் பிரயோகிக்கப்படுகின்றது. தஹ்கீம் நடைமுறை பற்றி இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் பல்வேறு விதிகளையும் வழிகாட்டல்களையும் முன்வைக்கின்றனர்.

மத்தியஸ்தம் என்பது (தங்களுக்குள் முரண்பட்ட) இருவர் ஒரு மனிதனிடம் சென்று தங்களுக்கிடையே தீர்ப்பு வழங்குமாறு கூறிய பின், அவன் தீர்ப்பளித்தால், அத்தீர்ப்பைப் பொருந்திக் கொள்வதாகும் என இப்னு குதாமா (1992, பா.10, பக். 94) விளக்கமளிக்கிறார்.

அவ்வாறு மத்தியஸ்தராக இருப்பதற்கு பின்வரும் நிபந்தனைகளைப் பெற்றிருக்க வேண்டும் என இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் வரையறை செய்கின்றனர்.

1. புத்தி சுவாதீனமுள்ளவராக இருத்தல், பருவ வயதை அடைந்தவராக இருத்தல், நன்மை தீமைகளைப் பிரித்தறியும் ஆற்றலுள்ளவராக இருத்தல் போன்ற அடிப்படைத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. இஸ்லாமிய விழுமியங்களைப் பேணி நடைமுறைப்படுத்துபவராக இருத்தல்.
3. எவ்வித கட்டுப்பாடுகளும் அற்ற சுதந்திரமான பிரஜையாக இருத்தல்.
4. நீதியாகச் செயற்படும் பண்பைக் கொண்டிருத்தல்.
5. (ஆகக் குறைந்தது) மத்தியஸ்தம் வகித்தல் சார்ந்த இஸ்லாமிய சட்டங்களை அறிந்திருத்தல்.
6. மத்தியஸ்தர்கள் இருவரும் பிணக்குற்ற தம்பதியினரின் உறவினர்களாக இருத்தல்.
7. அத்தோடு, மாலிகி, ஷாபிஈ மத்ஹபியினரும் ஹன்பலி மத்ஹபைச் சார்ந்த சிலரும் மத்தியஸ்தர்கள் ஆண்களாகவே இருக்க வேண்டும் என்று வரையறை செய்கின்றனர்.

**பிணக்குகளைத் தீர்ப்பதில் மத்தியஸ்தரின் வகிபாகம்**

மேலுள்ள தகைமைகளைப் பெற்ற மத்தியஸ்தர்கள் இருவர் நியமிக்கப்பட்டால், அவ்விருவரும் பிணக்குற்ற தம்பதியினர் இருவரிடமும் சென்று அவர்களது பிரச்சனைகளையும், நியாயங்களையும், வாதப்பிரதிவாதங்களையும் கேட்டறிந்து, நீதமான தீர்வை முன்வைப்பர். இந்நிலையில் மத்தியஸ்தரின் வகிபாகம் அல்லது அதிகார எல்லை என்னவென்பது பற்றி இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் குறிப்பிடும் போது ''பிணக்குற்ற கணவனையும், மனைவியையும் இணைத்து வைக்கும் அதிகாரம் மத்தியஸ்தர்களுக்குண்டு என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். ஆயினும், அவ்வாறு மத்தியஸ்தர்கள் தம்பதியினரைச் சேர்த்து வைத்தால் அல்லது அவ்விருவரும் இணைந்து வாழ்வதை விட பிரிந்து வாழ்வதே சிறந்தது எனக் கருதி பிரித்து வைத்தால் அவை வலிதானவையா? இல்லையா? என்பதில் இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் மத்தியில் இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன.

மத்தியஸ்தர்கள் இருவரும் நீதியான தீர்ப்பை வழங்கும் அதிகாரம் உடையவர்கள் எனின், அவ்விருவருக்கும் தம்பதியினரின் நலன் கருதி இணைத்து வைக்கவோ அல்லது பிரித்து வைக்கவோ உரிமையுண்டு. அதற்கு அத்தம்பதியினரின் அங்கீகாரம் அவசியமில்லை என்ற கருத்தையே உஸ்மான் (ரழி), அலி (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி) ஆகிய ஸஹாபாக்களும், பெரும்பாலான இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்களும் சிறந்ததெனக் கருதுகின்றனர். இதையே அல்குர்ஆன் '(அந்த மத்தியஸ்தர்கள்) இருவரும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால், அல்லாஹ் (தம்பதிகளாகிய) இருவரையும் ஒற்றுமையாக்கி விடுவான்' என்ற வசனத்தின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதிகாரம் மத்தியஸ்தர்களுக்குண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றது.

மேலும், ஒரு தடவை ''ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தத்தமது உறவினர்களுடன் அலி (ரழி) அவர்களிடம் வந்து தமது குடும்பப் பிணக்கை முறையிட்டனர். உடனே அலி (ரழி) மத்தியஸ்தர்களை நியமிக்குமாறு கட்டளையிட்டார்கள். அதற்கேற்ப, கணவனின் குடும்பத்திலிருந்து ஒருவரையும் மனைவியின் குடும்பத்திலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக

நியமித்தார்கள். அந்த மத்தியஸ்தர்களை நோக்கி ''உங்கள் மீதுள்ள கடமை என்ன?'' என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இருவரும் அத்தம்பதியினர் இருவரையும் பிரித்து வைப்பது தான் தீர்வு என்று கருதினால், நீங்கள் பிரித்து வைக்கலாம் என்று அலி (ரழி) கூறினார்கள். உடனே அந்தப் பெண் எனக்கு சாதகமாக இருந்தாலும் அல்லது பாதகமாக இருந்தாலும் இறை வேதத்தின் தீர்வைப் பொருந்திக் கொள்கிறேன்'' என்று கூறினாள். ஆனால், அக்கணவன்: 'பிரித்து வைப்பது என்றால் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்' என்றான். உடனே! அலி (ரழி) அக்கணவனை நோக்கி! நீ பொய் கூறுகிறாய். அவள் ஏற்றுக் கொண்டது போன்றே நீயும் ஏற்றுக் கொள்ளும் வரை தீர்வு வழங்க முடியாது' என்று கூறினார்கள் (பைஹகீ, பா.07, ப.498).

மேற்கூறப்பட்ட நிகழ்வு குறித்த தம்பதியினரை இணைத்து விடவும், பிரித்து விடவும் மத்தியஸ்தர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

ஆயினும், சில இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் 'மத்தியஸ்தர்களுக்கு தம்பதியினர் மத்தியில் இணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மாத்திரமே உண்டு. மாறாக, பிரித்து வைக்கும் அதிகாரம் இல்லை. அவ்வதிகாரம் ஆட்சியாளருக்கு மாத்திரமே உண்டு. அவ்வாறே குறித்த தம்பதியினரின் அனுமதியின்றி இந்த மத்தியஸ்தர்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாது' என்று கருதுகின்றனர். இதற்குச் சான்றாக 'அவள் ஏற்றுக் கொண்டது போன்றே நீயும் ஏற்றுக் கொள்ளும் வரை தீர்வு வழங்க முடியாது' என்ற அலி (ரழி) யின் கூற்றை அவ்வறிஞர்கள் முன்வைக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை அவதானிக்கும் போது, மத்தியஸ்தர்கள் கணவன்-மனைவிக்கிடையிலான பிணக்கை தீர்த்து வைப்பதற்குத் தம்மால் முடியுமானளவு முயற்சி செய்து சமரசத்தை ஏற்படுத்த வேண்டும். தம்பதியினரின் இருவரில் ஒருவர் இணைந்து வாழ முடியாது என்று மறுக்கும் போது மிகச் சிறந்த முறையில் பிரித்து வைக்க வேண்டும் என்பதே ஷரீஆவின் நிலைப்பாடாகும்.

ஆயினும், தற்கால நடைமுறையில் விவாகரத்து விடயங்களை விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்ற அரச அங்கீகாரம் பெற்ற ஷரீஆ குடும்பவியல் நீதிமன்றம் அல்லது காழி நீதிமன்றம் போன்றன காணப்படுவதனால் மத்தியஸ்தர்கள் தம்மால் முடிந்தளவு தம்பதியினரின் மத்தியில் சமரசத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். முடியாத போது அதற்கென விசேடமாக ஏற்படுத்தப்பட்டுள்ள காழி நீதிமன்றத்தில் அவ்விடயத்தை முறையிட வேண்டும், நீதிபதியும் தன்னால் முடிந்தளவு குறித்த தம்பதியினரை சமரசப்படுத்த முயற்சி செய்வார். அவரும் இறுதித் தீர்வாக விவாகரத்தை வழங்க முன்வருவார்.

எனினும், சில காழிகள் விவாகரத்தைப் பெறுவதற்காக தம்மிடம் வரும் தம்பதியினரை அரச அங்கீகாரம் பெற்ற ஆற்றுப்படுத்தும் நிறுவனங்களிடம் அல்லது ஆற்றுப்படுத்தும் நிபுணர்களிடம் அனுப்புவதையும் இலங்கையில் சில ஊர்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக: கொழும்பு மாவட்டத்தில் கடமையாற்றும் காழிகள் தம்மிடம் வரும் தம்பதியினரை

ஊயசந டுநைந ஊழரளெநடடலைபெ என்ற நிறுவனத்திற்கு அனுப்பி சமரசப்படுத்த முயற்சி செய்கின்றனர் (ஹில்மா எல்.எப்., ஐஸீல் எம்.ஐ.எம்.).

ஆயினும், இவ்வாறு உறவினர்கள் அற்ற வேறு நபர்களிடம் அல்லது பொது நிறுவனங்களிடம் குறித்த தம்பதியினரை அனுப்புவதற்கு முன்னர், அல்குர்ஆன் பரிந்துரை செய்யும் குடும்ப மத்தியஸ்த முறையினை நடைமுறைப்படுத்தும் போது, அத்தம்பதியினரை சமரசப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

**முடிவுரை**

இவ்வாய்வு கணவன் - மனைவியிடையே ஏற்படும் பிணக்குகளுக்கான அல்குர்ஆனின் தீர்வுகள் என்னவென்பதைத் தெளிவுபடுத்துகின்றது. முதலில் ஒரு கணவன் தன் மனைவியிடம் குறை அல்லது தவறைக் காணும் போது அதைப் பொருட்படுத்தக்கூடாது அல்லது அது அவளது இயல்பு தான் என்று பொருந்திக் கொள்ள வேண்டும். தவறுகளின் விளைவாக பிணக்குகள் அதிகரிக்கும் போது உபதேசம் செய்தல், படுக்கையை விட்டும் தூரமாக்குதல், காயம் ஏற்படாதவாறு அடித்தல் போன்ற வழிமுறைகளைக் கட்டங்கட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இறுதியாக, கணவன்-மனைவி ஆகிய இருவரும் தமது குடும்பத்திலிருந்து மத்தியஸ்தர்கள் இருவரை நியமித்து, தமது பிணக்குகளை சுமூகமாக குடும்பத்திற்குள்ளேயே தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அல்குர்ஆனின் அணுகுமுறையாகும்.

இரண்டாம் நிலைத் தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வு குடும்பப் பிணக்குகளுக்கான தீர்வுகள் பற்றிய நபி(ஸல்) அவர்களின் போதனைகளையும், இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்களின் கருத்துக்களையும் மீளாய்வுக்குறப்படுத்தியுள்ளமை அல்குர்ஆனின் குடும்பப் பிணக்குகள் சார்ந்த அணுகுமுறைகளையும், தீர்வுகளையும் துல்லியமாகத் தெளிவுபடுத்தியுள்ளது.

அல்குர்ஆனின் அணுகுமுறைகளைப் பின்பற்றி கணவன் - மனைவியிடையே ஏற்படும் பிணக்குகளுக்கான தீர்வுகளைக் காணும் போது விவாகரத்துக்களைக் குறைக்க முடியும் என்பது இவ்வாய்வின் பரிந்துரையும், எதிர்பார்ப்புமாகும்.

**உசாத்துணைகள்**

Abu Dawood, S. (1990) *Sunan Abi Dawood*. Beirut: Dar al-Kitab al-Arabi.

Al-Disawqi, S. (n.d.) *Haashiyathu al-Disawqi Ala al-Sharah al-Kabeer*. Beirut: Dar al-fikr.

Al-Jaṣṣāṣ, A.A. (1992) *Aḥkām al-Quran*. Beirut: Dār iḥyā al-turāth al-Arabi.

Al-Kāsānī, A. B. M. (2003) *Badā'iʿu al-Ṣanā'iʿ*. Beirut: Dār al-Kutub al-ʿilmiyyah.

Al-Quran (1993) Madinah: Malik Fahd Publishers for Al-Quran printing.

Al-Sharqaavi, A.H. (1950) *Al-Sharqaavi Ala Sharahi al-Tahreer wa al-Tanweer*. Cairo: Al-Azhar Publication.

Al-Shawkānī, M.A. (2004) *Nayl al-Awṭār*. Beirut: Bayt al-Afkār al-duwaliyyah.

Al-Tirmithi, M. E. (1985) *Sunan Tirmithi.* Beirut: Dar Ihya li al-Thuraath.

An-Navavi, Y. S. (2010) *Mukhthasar Saheeh Muslim,* Damuscus: Dar An-nawadir.

As-Shafi, M. I. (1990) *Al-Ummu*, Beirut: Dar Al-Ma'rifa.

Baihaqi. (1994) *al-Sunan al-Kubra*. Makkah: Maktabah Dar al-Baaz.

Badr, A. H. http://saaid.org/Doat/hamesabadr/140.htm

Buhari, M. I. (1987) *al-Jaami al-Saheeh al-Mukhtasar*. Beirut: Dar Ibn Katheer al-Yamama.

Hilma L.F. and Jazeel M.I.M. (2021) Muslim Kudumpangalil Veettu Vanmuraihal: Colombo Piradhesa Nervu Nilai Patriya Kala Aayvu. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, Vol.4, No.1, ISSN: 2550:3014, pp. 01-11.

Ibn Aabdeen. (2000) *Haashiyathu Ibn Aabdeen*. Beirut: Dar al-Fikr.

Ibn Ḥajar al-ʿAsqalānī, A. A. (1995) *Fatḥ al-Bārī bi Sharaḥi Ṣaḥīḥ al-Bukhārī*. Beirut: Dār al-Fikr.

Ibn Hajar al-Asqalani, A. A. (2003) *Al-Zawaajir an Iqtiraaf al-Kabaayir*. Cairo: Al-Maktabah al-Tawfeeqiyyah.

Ibn Katheer, I. (2000) *Tafseer Ibn Katheer*. Riyad: Darus Salam.

Ibn Manloor, M. A. (1956) *Lisaanul Arab al-Muheeth*. Beirut: Dar Saadir.

Ibn Qudāmah, A. A. (1992) *Al-Mughnī*. Cairo: Hajar.

Jazeel, M.I.M. and Fowzul, M.B. (2021) Muslim Kudumpa Pinakkuhalil Quazi Neethimanra Seyatpaaduhal: Ilankai Quazi Neethimanra Nervu Nilai Patriya Pahuppaayvu. *Neithal*, Vol.10, No: II, pp. 142-156.

Jazeel, M.I.M. and Fowzul, M.B. (2021) Neethi Manra Seyanmuraihalum Valakku Niyaaya Visaaranaiyum: Ilangai Quazi Neethimanrangal Patriya Anupavap Pahuppaayvu. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, Vol.2, No.2, ISSN: 2550:3014, pp. 20-31.

Muslim, I.H. (2005) *Saheeh Muslim*. Beirut: Dar Ihya li al-thuraath al-Arabi.

Rushana, A. and Sarjoon, R.A. (2019) Vivaaharaththu Muslim Pengal Maththiyil Etpaduthum Thaakkangal: Anuradhapura Mawattathai Maiyappaduthiya Aayvu. *6th International Symposium 2019* conducted by the Faculty of Islamic Studies and Arabic, South Eastern University of Sri Lanka, pp. 18-36.

Sayyid Qutub. (2003) *Fee Lilaalil Quran*. Cairo: Dar Ash-Shurooq.